
# தகவல்களை தெரிந்துகொள்ள உங்களுக்கிருக்கும் உரிமை



மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

# தகவல்களை தெரிந்துகொள்ளும் உரிமைகள்

தொகுப்பாசிரியர்
சுனந்த தேசப்பிரிய

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்
2001 ஜுலை 29

முன்பக்க அமைப்பு, உள்பக்க வரைபடங்கள் : கே.டபிள்யு.ஜனரஞ்சன

பதிப்பு : குலோப் பிரின்டஸ், தொ.பே : 329739

முரண்பாடு மற்றும் சமாதான ஆய்வுகள் நிகழ்ச்சித்திட்டம்,
மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்
32/3, பிளவர் வீதி, கொழும்பு - 07, இலங்கை.
தொ.போ : 94-1-565304/6, பக்ஸ் : 94-74-714460
ஈ-மெயில் : cpa@sri.lanka.net

## முன்னுரை

இந் நூல், பொதுமக்களின் அடிப்படை மனித உரிமையான தகவல் தெரிந்துகொள்ளும் உரிமை பற்றி பேசுகிறது. நல்லாட்சியும், நற்பிரஜையையும் உருவாக்கும் முகமாக எமது அமைப்பினால் வெளியிடப்படும் இன்னுமொரு நூல் இதுவாகும். நல்லாட்சி, நற்பிரஜை என்பன சமூக குறைநிறைகளை நிவர்த்தி செய்யும் இரு முக்கிய அம்சங்களாகும்.

2001 ஜுலை 29லிருந்து 31வரை கொழும்பில் நடைபெற்ற, தென் ஆசியா - தகவல் தெரிந்துகொள்ளும் உரிமை தொடர்பான கலந்துரையாடலையிட்டே இந்த நூல் வெளியிடப்பட்டது. இது, ஆர்ட்டிகல் 19 என்ற ஊடக சுதந்திரம் சம்பந்தமாக இயங்கும் சர்வதேச நிறுவனம், ஏற்பாடு செய்த அடிப்படை தகவல்கள் தெரிந்துகொள்ளும் உரிமைகள் சம்பந்தமாக நடைபெற்ற கலந்துரையாடல் அரங்கில் முன்வைக்கப்பட்டவையாகும். ஆர்டிகல்19 என்ற நிறுவனத்தோடு, இலங்கை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், இந்தியாவிலுள்ள பொதுநலவாய மனித உரிமை முயற்சிகள் அமைப்பு மற்றும் பாகிஸ்தான் மனித உரிமைகள் ஆணைக்குழு ஆகியன இணைந்தே இந்த கலந்துரையாடலை ஏற்பாடு செய்திருந்தது.

இந்த கலந்துரையாடல் ஏற்பாடானது, தெற்காசியாவில் காணப்படும் தகவல் தெரிந்துகொள்ளும் உரிமை தொடர்பாக பொதுமக்களின் ஆற்றலை ஊக்குவிக்கும் என்ற நோக்கையே கொண்டதாகும். இந்த நூல் தகவலை தெரிந்துகொள்ளும் ஆற்றலை விருத்தி செய்யும் அபிவிருத்திக்கான ஒரு உந்துகோலாகவே அமையும் எனபது எமது எண்ணமாகும்.

தகவல் தெரிந்துகொள்ளும் உரிமைகள் தொடர்பாக பொதுமக்கள் மத்தியில் தெரிவிப்பதற்கும், முழுச் சமூகத்திற்கும் பரப்புவதற்கும் இலகுவான கையேடாகவே இந்நூல் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், அதுவே இந்நூல் வெளியிடுவதற்கான உறுதியான எண்ணமுமாகும். எந்தவொரு மனிதரும் தான் தகவல் தெரிந்துகொள்ளும் உரிமைகள் தொடர்பான அவசியமான அடிப்படை அம்சங்கள் இந்த நூலில் அடங்கியுள்ளது.

Commonwealth Human Rights Initiative அமைப்பு ஏற்கனவே வெளியிட்ட Your Right to Information என்ற நூலினை உசாத்துணையாகக் கொண்டே இந்த நூல் தொகுக்கப்பட்டுள்ளது.

சுனந்த தேசப்பிரிய
2001.07.29

# தகவல்களை தெரிந்துகொள்ள உங்களுக்கிருக்கும் உரிமை

அரசாங்கத்தினதும் ஏனைய மக்கள் அமைப்புக்களினதும் செயற்பாடுகள் தொடர்பாக தகவல் தெரிந்துகொள்ளும் உரிமை எமக்கிருப்பதை எம்மில் அதிகமானோர் அறியாதிருக்கிறோம்.




## மன்னாரிலிருந்து மாத்தறை வரைக்கும்............

- சிறுவர்களுக்கான தடுப்பூசி ஏற்றும் செயற்திட்டம் ஒன்று மன்னார் மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டது. ஆனால், ஒரு கிராமத்தில் உள்ள குழந்தைகளுக்கு தடுப்பூசி வழங்கப்படவில்லை. அந்த கிராம மக்கள் சுகாதார அதிகாரிகளை சந்தித்து ஊசியேற்றும் செயற்திட்டம் குறித்த தகவல்களைக் கேட்டார்கள். எத்தனை சிறுவர்களுக்கு ஊசி ஏற்றப்பட்டது? எத்தனை சுகாதார ஊழியர்கள் இந்தப்பணியில் ஈடுபடுத்தப்பட்டார்கள்? எந்தளவு மருந்து கொண்டுவரப்பட்டது? போன்ற விபரங்களை கேட்டனர். இந்த தகவல்களை வழங்கும் கடமை சுகாதார அமைச்சுக்கு கிடையாது எனக்கூறி அம்மக்களை விரட்டினர் அதிகாரிகள்.



- பொலனறுவை மாவட்டத்தில் பல குழந்தைகள் வயிற்றோட்டத்தினால் மரணமானதாக ஒரு தகவல் பெண் பத்திரிகையாளர் ஒருவருக்கு அறியக்கிடைத்தது. விரிவான அறிக்கை ஒன்றை தயாரிப்பதற்காக அவர் அங்கு சென்றார். விபரங்களை புரட்டிப்பார்த்தபோது குழந்தைகளின் மரணத்துக்கான காரணம் ஊட்டச்சத்தின்மையே என்பது தெரியவந்தது. மருத்துவமனை அதிகாரிகளை சந்தித்து குழந்தைகளின் நோய் தொடர்பாக விபரங்கள் கேட்டதும், அவை இரகசியமானவை என்பதால் அவற்றை தரமுடியாது என அதிகாரிகளால் பதிலளிக்கப்பட்டது.



- ஜனசவிய உதவி பெறும் சிலர் தமக்கான உலருணவு நிவாரணத்தை பெறுவதற்காக குருணாகலயில் உள்ள கிராமப்புற கூட்டுறவுக்கடையொன்றில் காத்திருந்தார்கள். குறிப்பிட்ட அரிசி, பருப்பு என்பன இன்னும் கிடைக்காததால் அவற்றுக்குப் பதிலாக வேறு பொருட்களை பெற்றுச்செல்லுமாறு கூட்டுறவு விற்பனை நிலைய முகாமையாளர் கூறினார். ஜனசவிய உதவி பெறுபவர்கள் மத்தியிலிருந்து ஒரு வாயாடி விவசாயி கூட்டுறவுக் கடையின் பொருட்கள் பதிவேட்டை பார்க்க அனுமதி கேட்டார். முகாமையாளருக்கு கடும்கோபம் உண்டானது. பதிவேட்டை யாருக்கும் காண்பிக்க நான் தயாரில்லை என கத்தினார்.



• பட்டதாரிகளின் அமைப்பில் தம்மை பதிவு செய்துகொண்ட கமலா மற்றும் ருக்மன் ஆகிய இருவரும் 5 வருடகாலமாக வேலையை எதிர்பார்த்து காத்திருந்தார்கள். வேலை ஒன்று கிடைக்குமா என்று கேட்ட எந்தச்சந்தர்ப்பத்திலும் உரிய பதில் அவர்களுக்கு கிடைக்கவில்லை. தங்களுக்குப் பின்னர் பதிவு செய்த ஜயலத்துக்கு வேலை கிடைத்துவிட்டதாக இவர்கள் அறிந்துகொண்டனர். பதிவு தொடர்பாக விபரங்களைக் கோரி, அதிகாரிகளுக்கு கடிதம் ஒன்றை அனுப்பினார்கள். அமைச்சரின் அனுமதியின்றி அந்தத் தகவல்களை வழங்க முடியாது என அவர்களுக்கு பதிலளிக்கப்பட்டது.



• பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது பதவிக்காலம் முடிந்த பின்னரும் அரசாங்கத்தின் உத்தியோகப்பூர்வ இல்லங்களை பயன்படுத்துகிறார்கள். அவ்வாறான மூன்று முன்னாள் அமைச்சர்களின் கொழும்பு சொகுசு பங்களாக்களின் செலவு விபரங்களை தருமாறு பத்திரிகையாசிரியர் ஒருவர் பாராளுமன்றக் குழுவிடம் கேட்டார். இது தேசிய பாதுகாப்புடன் தொடர்புடைய விடயமாதலால் அந்த விபரங்களை தரமுடியாது என அவருக்கு அறிவிக்கப்பட்டது.



- மாத்தறையில் இரண்டு கிராமங்களை ஒன்றிணைக்கும் பாலமொன்றைக் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டப்பட்டு இரும்புக் கேடர்களும் கொண்டு வந்து போடப்பட்டது. ஆனால் நீண்டகாலமாக பாலம் கட்டப்படவில்லை. அதற்கு அப்பகுதி பாராளுமன்ற உறுப்பினரை சந்தித்த கிராமவாசிகள் சிலர் பாலத்துக்கான நிதி ஒதுக்கீடு, ஒப்பந்தக்காரர் மற்றும் நிருமாணப்பணிக்கான காலம் போன்ற விடயங்களை வினவினர். தேர்தல் நெருங்கி வருவதால் முதலில் அதில் வெற்றி பெற்றுவிட்டு பின்னர் தகவல்களை வழங்க முயற்சி செய்வதாக அந்த எம்.பி கூறினார்.

மேற்சொல்லப்பட்ட சகல சந்தர்ப்பங்களிலும் விபரங்களை பெற்றுக்கொள்ள இந்த நாட்டு மக்களால் முடியாமல் போய்விட்டது. தகவல்கள் தொடர்பில் இன்னமுமே இந்த நாட்டில் இருப்பது இரகசியமான கலாசாரம்தான்.

ஒரு நாட்டின் நிர்வாக செயற்பாட்டுடன் பொதுமக்கள் சம்பந்தப்படும் விடயத்தில் தகவல்களை கேட்பதும் பெற்றுக்கொள்வதும் முக்கியமானதொரு அம்சமாகும். அவற்றை வழங்குவது அரச நிருவாகத்தின் வெளிப்படைத்தன்மையை பேணுவதாகும். தகவல் வழங்கப்பட்டதன் பின்னர் பிரதேசத்தினதும் நாட்டினதும் செயற்பாடுகள் உரிய முறைப்படி நிகழ்கின்றனவா என்பது குறித்து விழிப்புடன் இருக்க மக்களால் முடியும். அந்த செயற்பாடு சரியாக நிகழாத பட்சத்தில் அதற்குக் காரணமானவர்கள் யார் என்பதையும் தெளிவாக அறிந்துகொள்ளும் உரிமையும் மக்களுக்கு இருக்கிறது. அது நிர்வாகத்தின் பொறுப்புணர்வை நிலைநிறுத்தும்.

தீர்மானங்கள் குறித்து அறிந்து கொள்ளவும், பிரச்சினைகள், நடப்பு விபரங்களைப் பற்றி தெளிவு பெறவும் பல்வேறு விடயங்கள் தொடர்பாகவும் அவற்றுக்கான காரண கர்த்தாக்களை அறிந்துகொள்ளவும் எமக்கு தகவல்கள் அவசியம். தகவல் தெரிந்து கொள்வது தொடர்பான உரிமை நேர்த்தியான அரச நிர்வாகம் ஒன்றின் அத்திவாரத்திற்குச் சமமானதாகும்.


# தகவல் எமது உயிர் மூச்சு

ஜனநாயகத்தின் உயிர் மூச்சு தகவல்கள்தான், தமது சமூகத்தில் நடைபெறுவதை மக்கள் அறிய முடியாமல் அவர்களை நிர்வகிப்பவர்களின் நடவடிக்கைகள் மூடி மறைக்கப்படுமாயின், மக்களால் அந்த சமூகத்தின் செயற்பாடுகளுக்கு ஆக்கபூர்வமான பங்களிப்பை வழங்க முடியாமல் போகும்.

தகவல்கள் மக்களின் தேவை மாத்திரமின்றி நேர்த்தியான அரசாங்கமொன்றின் அத்தியாவசிய பண்புமாகும். மோசமான அரசுகளுக்கு தமது இருப்புக்காக வேண்டியே இரகசியம் தேவைப்படும். முறைகேடு, வீண்விரயம், ஊழல் என்பவற்றுக்கு இது வழிவகுக்கும்.

ஜனநாயகத்தை அடிப்படையாகக்கொண்டு அதற்குச் சமாந்திரமான சுதந்திர

வெகுஜன தொடர்பு ஊடகங்களைக்கொண்ட ஒரு நாடு தவறுகளால் அழிந்ததில்லை என்கிறார் நோபல் பரிசு பெற்ற அமர்த்தியாசென். தகவல் தெரிந்து கொள்ளும் சுதந்திரம் அரசாங்கத்தின் செயற்பாட்டை பரிசோதிக்கும் வாய்ப்பை மக்களுக்கு பெற்றுக்கொடுக்கிறது. அத்தோடு அந்த செயற்பாடு குறித்த விவாதத்துக்கான அடிப்படையையும் அது வழங்குகிறது.




எவ்வாறெனினும் அதிகமான அரசுகள் இரகசியமான முறையில் தமது நடவடிக்கைகளை மேற்கொள்ளவே கூடுதல் ஆர்வம் காட்டுகின்றன. சுவாஹிலி மொழியில் அரசு என்பதைக் குறிக்கும் சொல்லொன்று கடும் இரகசியம் என்ற அர்த்தத்தை வழங்குகின்றது. ஜனநாயக அரசுகள் கூட தமது செயற்பாட்டின் பெரும்பகுதியை மக்களின் கண்களுக்கு மறைத்தே செய்கின்றன. அவ்வாறு இரகசியமாக செயற்படுவதற்காக அந்த அரசுகள் பல்வேறு காரணங்களையும் தேடிக்கொள்கின்றன. தேசிய பாதுகாப்புக்காக, மக்கள் நலனுக்காக, சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாப்பதற்காக போன்றன அந்த காரணங்களில் சிலவாகும். உத்தியோகபூர்வ

தகவல்கள் உண்மையில் மக்கள் சொத்துக்களாகும். ஆனால் அநேகமான அரசுகள் அவற்றை ஆட்சியாளர்களின் சொத்துக்களைப் போன்றே பாதுகாக்கின்றன.

அதிகார துஷ்பிரயோகம் என்பது அரசியல், சமூக கலாசார சீரழிவு, ஊழல், உறவினர்களுக்கான அதிகபட்ச சலுகை, சட்டத்தின் மேலாதிக்க வீழ்ச்சி போன்வற்றின் ஊற்று. மக்களுக்கு அரச நிர்வாகத்தின் செயற்பாட்டை வெளிப்படையாக தெரிந்துகொள்ள ஏற்பாடு இல்லாமை அதிகாரத் துஷ்பிரயோகத்துக்கு பிரதானமாக வழியேற்படுத்துகிறது. எந்தவொரு சமூகத்திலும் இடம்பெறும் இத்தகைய அழிவுச்செயற்பாடுகளை தடுக்கக்கூடிய அறிவுள்ள மக்கள் தோன்றுவது சுதந்திரமாக தகவல்களை பெற்றுக்கொள்ள வசதியிருக்கும் ஒரு சூழலில்தான்.

ஜனநாயக சமூகம் எனும்போது தகவல் தெரிந்துகொள்ளும் உரிமை அதன் அடிப்படை நிபந்தனையாகும். வாழ்வதற்கு காற்று, நீர், உணவு என்பன எவ்வாறு அவசியமாகிறதோ அதேபோன்று நேரடியான ஜனநாயக சமூகத்துக்கு தகவல்கள் அவசியம். தகவல் தெரிந்துகொள்ளும் உரிமையும் தற்போது சமூக உரிமையாகவே கருதப்படுகின்றது. உண்மையில் தகவல் பெறும் உரிமை வெளியீட்டுச் சுதந்திரத்தின் ஓர் அங்கம் மாத்திரம்தான்.

தகவல் தெரிந்துகொள்ளும் உரிமை இந்த நாட்டில் அரைகுறையாகவே இருக்கின்றது. அந்த உரிமையை உத்தரவாதப்படுத்தும் சட்டமூலமெதுவும் இலங்கையில் இல்லை. உலகின் ஜனநாயக நிர்வாகங்கள் பலவற்றில் தகவல் பெறும் உரிமை சட்ட ரீதியில் அரசியலமைப்பில் இடம்பெற்றுள்ளது. அவ்வாறானதொரு சட்டம் அவசியமென்று 1994ம் ஆண்டு பொதுஜன ஐக்கிய முன்னணி ஏற்றுக்கொண்டது. அதற்கான பூர்வாங்க சட்ட மூலமும் தயாரிக்கப்பட்டது. அதற்கப்பால் எந்த முன்னேற்றமும் நிகழவில்லை.

## தகவல் வழங்குவது அரசாங்கத்தின் கடமையாயின் பெரும்பாலும் எல்லா சந்தர்ப்பங்களிலுமே தகவல்களை பெற்றுக்கொடுக்க மறுப்பது ஏன்?

- அரச இயந்திரம் அளவுக்கதிகமாக அடர்த்தியான பலம் மிக்கதாகவும் ஊழல் நிறைந்ததாகவும் காணப்படுகின்றது.

- நவீனத்துவமற்ற பதிவேட்டு முறைகளால் தேவையான தகவல்களை தேடுவது சிரமமான காரியமாகவுள்ளது.

- தகவல் தெரிந்துகொள்ள தமக்கிருக்கும் உரிமைகளை மக்கள் அறியாதிருக்கிறார்கள். அதனால் தகவல் வழங்குவது நிராகரிக்கப்பட்டதும் தமது உரிமை குறித்து எடுத்துரைக்க அவர்களால் முடிவதில்லை. தற்போதைய சட்டத்தின் படி அவ்வாறான

உரிமையை நிலைநாட்ட நீதி மன்றத்தின் உதவியை நாட வேண்டியுள்ளது. அது சிரமமானதும் காலம் தாழ்த்துவதுமான செயலாகும்.

- அமுலில் உள்ள சில சட்டங்களின் அடிப்படையில் தகவல் வழங்குவதை நிராகரிக்க முடியும்.



## அவ்வாறாயின் நாம் எமது உரிமைகளை பெற்றுக்கொள்வது எப்படி?

மக்களுக்கு தகவல்களை பெற்றுக்கொடுக்குமாறு அரசாங்கம்
அதன் பாராளுமன்றத்துக்கு உத்தரவிடுவதன் மூலம்
அல்லது

தகவல்களை பெற்றுக்கொள்ளக் கூடிய விதத்தில்
சட்ட விதிகளை மாற்றியமைப்பதன் மூலம்
அல்லது

முறைப்படி தகவல்களை பெறக்கூடிய வகையில்
சட்டங்களை இயற்றுவதன் மூலம்.

இவற்றுள் மிகவும் சிறப்பான தீர்வு தகவல்களை பெற்றுக்கொள்ளல் குறித்த சட்டமூலம் ஒன்றை நிறைவேற்றுதலாகும்.

அரசாங்கத்தின் உத்தரவு, வெவ்வேறு வகையான சட்ட திருத்தங்கள் போன்றவற்றில் நம்பிக்கை வைப்பது புத்திசாலித்தனமல்ல என்பதை நாம் அனுபவத்தில் உணர்ந்திருக்கிறோம். அதனாலேயே முழு நாட்டிற்கும் செல்லுபடியாகக் கூடிய சட்டம் கொண்டுவரப்பட வேண்டும் என்று நாம் கோரவேண்டியுள்ளது. அவ்வாறானதொரு சட்டத்தின் மூலம் தகவல் பெறுவதற்கான முறையான செயல்வடிவமொன்று மக்களுக்குக் கிடைக்கும்.

## அவ்வாறானதொரு சட்டத்தின் மூலம்,




* மக்களுக்குத் தேவையான
தகவல்களைப்
பெற்றுக்கொள்ளும்
சந்தர்ப்பம் வழங்கப்படவேண்டும்.

* எந்த ஒரு நபருக்கும்
தேவையான தகவல்களை வழங்க
வேண்டியது அரசாங்கத்தினதும்
ஏனைய
பொது அமைப்புக்களினதும்
கடமை என்று தெளிவாக
குறிப்பிடப்பட வேண்டும்.

* தகவல்களை பதிவதற்காக
கணணி போன்ற நவீனமான
வசதிகள் ஏற்படுத்தப்படல் வேண்டும்.


* பொதுமக்களால்
புரிந்துகொள்ளக்கூடிய
சரளமான முறையில்
தகவல்கள்
வழங்கப்பட வேண்டும்.

* குறிப்பிட்ட தகவல் யாரால், எந்த கால
கட்டத்தில் வழங்கப்படுகின்றது
என்பதும் குறிப்பிடப்பட வேண்டும்.



* மக்களுக்கு தகவல் வழங்கப்படுவது எழுத்து மூலமாகவா, வாய்மூலமாகவா அல்லது விளம்பரப் பலகை ஊடாகவா, எந்த இடத்தில் போன்ற விபரங்களும் இடம்பெறுவது அவசியம்.

* கைது, மற்றும் தடுத்து வைத்தல், முக்கியமான சுகாதாரத் தகவல்கள், மக்கள் வாழ்வுக்கும் சூழலுக்கும் தாக்கம் செலுத்தும் திட்டங்கள் போன்ற மக்களின் சுதந்திரத்திற்கும்,



வாழ்வியல் உரிமைக்குமான தகவல்களை
கேட்காமலேயே தானாக முன்வந்து
வெளியிடும் தார்மீகப் பொறுப்பு அரசாங்க
திணைக்களங்களுக்கு ஒப்படைக்கப்படுதல் வேண்டும்.


* தகவல்கள் இலகுவாக மக்களைக்
சென்றடையும் விதத்தில் தபால் மூலம்,
கிராம சேவையாளர் காரியாலயங்கள் மூலம்
பிரதேச சபைகள், கூட்டுறவு நிலையங்கள் மூலமாக
வழிசெய்யப்படல் அவசியம்.

* தகவல் வழங்கப்படுவது நிராகரிக்கப்படுமிடத்து
அதற்கான தீர்வை இலகுவாகப் பெற வசதி
செய்யப்படவேண்டும்.

## இவ்வாறானதொரு சட்டத்தை தயாரிக்க/ நிறைவேற்ற எம்மால் செய்யக்கூடியது என்ன?

இந்த நாட்டின் நீதிச்சேவை ஆணைக்குழுவினால் இது தொடர்பாக ஏற்கனவே உத்தேச சட்டமூலம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. எனினும் இந்த சட்டமூலம் மிகவும் பலவீனமான ஏற்பாடுகளை கொண்டுள்ளதை சட்டத்துறை நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். தற்போது தகவல்களை இரகசியமாக வைக்க வழிசெய்யும் சட்டங்கள் எதுவும் இந்த உத்தேச சட்ட மூலத்தின் ஊடாக செயலிழக்காது.

1994ம் ஆண்டு ஆட்சிக்கு வந்த பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தினால் வெகுஜன தொடர்புசாதன சட்டத் திருத்தம் குறித்த ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட அரச சட்டத்தரணி ஆர்.கே.டபிள்யு.குணசேகர அவர்களின் தலைமையிலான குழு இவ்வாறான சட்டமூலம் ஒன்றுக்கான பூர்வாங்க வரைவை தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.



எனினும் அவற்றை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை.

இலங்கை பத்திரிகையாசிரியர் சம்மேளனம் 2001 தகவல் தெரிந்துகொள்ளும் சுதந்திரம் குறித்த சட்டமூலம் என்ற பெயரில் சட்டமூலம் ஒன்றை தயாரித்து வெளியிட்டுள்ளது. இந்த சம்மேளனம் இதனை பாராளுமன்றத்தின் அங்கீகாரத்துக்காக சமர்ப்பிக்க முயற்சி மேற்கொண்டு வருகின்றது.

பத்திரிகைச் சுதந்திரம் தொடர்பாக பணியாற்றும் ஆர்ட்டிகல் 19 என்ற சர்வதேச அமைப்பு தெற்காசியாவுக்கு பொதுவான சட்டமூலம் ஒன்றை தயாரித்துள்ளது.

ஆர்ட்டிகல் 19 அமைப்பின் சட்ட மூலத்தையும், பத்திரிகையாசிரியர் சம்மேளனத்தின் சட்ட மூலத்தையும் ஒன்றிணைப்பதன் மூலம் தகவல் தெரிந்துகொள்ளும் சுதந்திரம் குறித்த ஏற்றதான சட்டமூலம் ஒன்றை தயாரிக்க முடியும்.

அவ்வாறான ஒருமித்த செயற்திட்டம் ஒன்றை முன்னெடுப்போமாயின் பின்னர் அதனை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து சட்டமாக்கும் சந்தர்ப்பம் கிட்டும்.

## அவ்வாறானதொரு சந்தர்ப்பம் உருவாகினால் நாம் செய்ய வேண்டியது என்ன?

அந்த சட்ட மூலம் குறித்து நடைபெறும் விவாதங்களில் ஆர்வம் காட்டுங்கள். சட்ட மூலத்தின் பிரதி ஒன்றை பெற்றுக்கொள்ளுங்கள். அது பெரும்பாலும் பத்திரிகைகள் ஊடாக வெளிவரலாம்.

- உங்கள் அமைப்பின் தேவைகளுக்கு ஏற்ற விதத்தில் சட்டமூலம் அமைந்திருக்கிறதா என்பதை ஆராயுங்கள், கலந்தாலோசனை செய்யுங்கள்.

- இது விடயம் குறித்து செயற்படுபவர்களுடன் தொடர்புகளை கொண்டிருங்கள்.

- உங்கள் சமூகத்தில்/அமைப்பில் இது தொடர்பாக விவாதியுங்கள். தேவையேற்படின் சிறப்புரையாளர் ஒருவரையும் அழையுங்கள்.




- உங்கள் பிரதேசத்தில்/அமைப்பில்/பல்கலைக்கழகத்துக்குள், தொழிற்சங்கத்துக்குள் இது குறித்து கருத்துப் பரிமாற்றங்களை ஏற்படுத்துங்கள்.
- உங்கள் பிரதேசத்தின் மக்கள் பிரதிநிதிகளை சந்தித்து இது விடயம் தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்துங்கள்.
- சாத்தியமான சகல வழிகளிலும் உங்கள் கருத்துக்களை வெளிப்படுத்துங்கள். சகல அபிப்பிராயங்களும் பயன்மிக்கதாக அமையும்.

# தகவல்களை அறிந்துகொள்வதில் உள்ள முக்கியத்துவம் என்ன?

ஜனநாயக சமூக அமைப்பில் நாமே அரசாங்கத்தை அமைக்கிறோம். எம்மால் தெரிவு செய்யப்படும் மக்கள் பிரதிநிதிகள் மூலமாக நாம் அதைச் செய்கின்றோம். அரசாங்கத்தினதும் பொது அமைப்புக்களினதும் செயற்பாடுகள் எமது பணத்தின் மூலம் எமக்காகவே நடைபெறுகின்றன.

அந்த செயற்பாடுகள், எமது தேவைகளுக்கு ஏற்ப நிகழும் விதத்தில் முடிவுகளை எடுக்கவும், அவற்றில் பங்குகொள்ளவும் எம்மால் முடியுமாக இருப்பது அவசியம். இதற்காக வேண்டி அந்த விடயங்கள் குறித்த தகவல்களை நாம் அறிந்திருக்க வேண்டும்.


இந்த செயற்பாடு பங்குபற்றலாகும்.



எமது வாழ்க்கையில் பல்வேறு விதத்தில் தாக்கம் செலுத்தும் தீர்மானங்கள்

அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன. எம்மில் தாக்கம் செலுத்தும் முடிவுகள் குறித்து அறிந்துகொள்ளும் உரிமை எமக்கிருக்கிறது. ஏதேனும் ஒரு செயற்றிட்டம் தொடர்பான சகல தகவல்களும் அனைவருக்கும் வெளிப்படையானதாக இருக்குமாயின் ஊழலுக்கான வாய்ப்பு குறையும். (இது அரசாங்கத்தின் வெளிப்படைத் தன்மையாகும்)

அரசாங்கம் மக்களுக்கானதே அதற்கு சட்டத்தை மீறி செயற்பட முடியாது. உரிய முறையில் செயற்படத்தவறுமிடத்து அரசாங்கம் பதில் சொல்ல வேண்டும். கந்தளாய் குளத்தின் அணைக்கட்டு வெடிப்புற்றால் அதற்கு பொறுப்பானவர்களை அறிந்துகொள்ளவும் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவும் மக்களுக்கு உரிமையிருக்கிறது. இது பொறுப்புணர்வு எனப்படுகிறது. முடிவுகள் குறித்து அறிந்துகொள்ளவும் செயற்பாடுகளை குறித்த விபரங்களை அறியவும் கணக்கு வழங்குகளை கேட்பதற்கும் பல்வேறு விடயங்கள் அவற்றுக்கு பொறுப்பானவர்களை தெரிந்து கொள்ளவும் எமக்கு தகவல்கள் அவசியம்.



# தகவல் தெரிந்துகொள்ளும் சுதந்திரம் தொடர்பான உண்மைச் சம்பவம்

(தயானந்த திசாநாயகவுக்கு எதிராக,கலாநிதி அர்ஜுன பராக்கிரம)

தயானந்த திசாநாயக்க
(தேர்தல் ஆணையாளர்)

கலாநிதி அர்ஜுன பராக்கிரம
(தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம்)

இலக்கம் : 640/2000

2000 அக்டோபரில் பொதுத் தேர்தலின்போது தேர்தல் ஆணையாளரினால் வாக்குச் சாவடிகள் பலவற்றின் வாக்குப்பதிவு முற்றாக செல்லுபடியற்றதாக்கப்பட்டதுடன் மேலும் சிலவற்றின் வாக்குகள் ஓரளவுக்கு செல்லுபடியில்லாமல் செய்யப்பட்டது.

அவ்வாறிருப்பினும் வாக்கு மோசடி இடம்பெற்றதாக அறிவிக்கப்பட்ட மேலும் பல வாக்குச் சாவடிகள் தொடர்பில் அவர் இவ்வாறான தீர்மானம் எதனையும் மேற்கொள்ளவில்லை.

இந்த இரட்டைச் செயற்பாட்டுக்கான காரணத்தை அறிந்துகொள்ளும் உரிமை தமக்கிருப்பதாக கலாநிதி அர்ஜுன பராக்கிரம கருதினார். இது இந்த நாட்டு குடிமகன் ஒருவரின் தகவல் தெரிந்துகொள்ளும் உரிமையாகும்.

இதன்படி கலாநிதி அர்ஜுன பராக்கிரம உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்றை சமர்ப்பித்து, தேர்தல் ஆணையாளரின் இந்த தெளிவற்ற செயற்பாடு இந்நாட்டு வாக்காளர்களின் அடிப்படை உரிமையை மீறும் செயலென குறிப்பிட்டார்.

மேலும் தேர்தல் நடத்துவதில் பின்பற்ற வேண்டிய வழிமுறைகளை அமைக்குமாறும் (அதன் மூலம் மக்கள் அதனை தெரிந்துகொள்ள வழி செய்யுமாறும்) தேர்தல் ஆணையாளருக்கு உத்தரவிடுமாறு அவர் உயர் நீதிமன்றத்தைக் கோரினார்.

அதேபோன்று,

- வாக்குச்சாவடியொன்றில் பதிவுசெய்யப்பட்ட வாக்குகளை நிராகரிக்கும்போது.
- தேர்தல் ஒன்றின்போது அளிக்கப்பட்ட வாக்குகளை நிராகரிக்கும் வழிமுறைகள் தொடர்பாக.

வெவ்வேறு பிரதேசங்களில் அளிக்கப்பட்ட வாக்குகளை செல்லுபடியற்ற தாக்கும்போது ஒரேமாதிரியான வழிமுறையை கையாளுதல் குறித்த உத்தரவாதம், அளவீட்டு வகைப்படுத்தல் முறைகளை முன்வைக்குமாறு தேர்தல் ஆணையாளருக்கு உத்தரவிட வேண்டும் என உயர் நீதிமன்றத்திடம் கேட்டார்.

இந்த வழக்கின் அடிப்படைக்காரணி தகவல்களை அறிந்துகொள்ள நாட்டு மக்களுக்கு இருக்கும் உரிமையேயாகும்.

வாக்குகளை நிராகரிக்கும் செயல்முறையை மக்களுக்கு தெரிவிக்க வேண்டிய சட்ட ரீதியிலான கடப்பாடு இன்று தேர்தல் ஆணையாளருக்கு இல்லை அதனால் கடந்த பொதுத்தேர்தலின்போது வாக்குகளை நிராகரித்தல், செல்லுபடியற்ற தாக்குதல் என்பன தொடர்பிலான செயல்முறையை அறிய தேர்தல் வன்முறைகளை கண்காணிக்கும் நிலையத்தினால் முடியவில்லை. இத்தகைய செயல்களில் மெய்நிலையை பேணும் பொருட்டு எமது சட்ட திட்டங்களை பொதுமக்கள் அறிந்திருக்க வேண்டும் என்று கலாநிதி அர்ஜுன பராக்கிரம உயர் நீதிமன்றத்திடம் தெரிவித்தார்.

இந்த வழக்கு இன்னும் முடியவில்லை தேர்தல் ஒன்றை நடத்துவதற்குத் தேவையான வழிகாட்டல்களை அரசியல் கட்சிகளுடன் கலந்தாலோசித்து முன்வைக்குமாறு விசாரணையின் இடைநடுவில் உயர் நீதிமன்றம் தேர்தல் ஆணையாளருக்கு உத்தரவிட்டது.

# மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (சீபிஏ)

இலங்கையில் நல்லாட்சியையும், நிலவும் முரண்பாடுகளைத் தீர்க்கும் செயற்பாடுகளையும் வலுப்படுத்துவதற்கான அவசரதேவை ஒன்று எழுந்துள்ளது என்ற வலுவான நம்பிக்கையின் பெயரிலும், குடியியல் சமூகத்தை சேர்ந்த இந்த செயல் முறைமையைக் கட்டியெழுப்புவதில் முக்கியமான பங்கை வகிக்கவேண்டும் என்பதை உணர்ந்ததன் பேரில் 1996ல் யூன் மாதம் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் ஸ்தாபிக்கப்பட்டது.

பொதுக்கொள்கைகள் தொடர்பில் எமது நிலையத்தின் அடிப்படையான பங்களிப்பு யாதெனில் ஊக்குவிக்கப்படும் மாற்றுக்கொள்கைகளைக் கண்டறிந்து அபிவிருத்தி செய்து அவற்றையும் அவை தொடர்பான ஆய்வுகளையும், கருத்துப் பரிமாற்றத்தினாலும், செயல் முன்னெடுப்புக்களினால் பரப்புதலும், முன்னிலைப் படுத்தலும் ஆகும்.


## பணிப்பளார்கள் சபை

சுனில் பெஸ்டியன
ரொஹான் எதிரிசிங்க
கலாநிதி அர்ஜுன பராக்கிரம
சிறினி சிறிவர்த்தன
கலாநிதி ஜயதேவ உயன்கொட
கலாநிதி செல்டன் வனசிங்க
பிரட்மன் வீரக்கோன்
கௌரி பொன்னையா

## நிறைவேற்றுப் பணிப்பாளர்

கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து

# எங்களுடைய தகவல் அறிந்துகொள்வதற்கான உரிமை

## எப்பாவல பொசுபேற் படிமம் குறித்த தகவல்களைக்கோரல்

கிழே கையொப்பமிடும் நாம் எப்பாவெல பொசுபேற் படிமம் அகழ்ந்தெடுக்கப்படும் யோசனை தொடர்பில் அவதானம் செலுத்துகின்றோம். இது குறித்து கீழ்வரும் விடயங்களை அதி மேதகு ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டு வருகின்றோம்.


- எப்பாவெல பொதுபேற் படிமம் அந்த பிரதேசத்தில் 56 சதுர கிலோமீற்றர் தூரம் பரந்துள்ளது.
- இந்த பகுதிகளைச் சுற்றி 26 கிராமங்களில் பல்லாயிரக்கணக்கான மக்கள் வசிக்கின்றனர்.
- ஜய கங்கை எனும் ஆற்றின் 5 கிலோமீற்றர் பயணம் இந்த பிரதேசத்தினூடாகவே நடைபெறுகிறது.
- அத்துடன் சுமார் 100 கிலோமிற்றர் நீளமான கால்வாய்கள் கிராம மக்களுக்கு நிர் வழங்குகின்றன.

இந்த உத்தேச அகழ்வுத் திட்டத்தினால் கிராம மக்களின் வாழ்க்கை முறை, சமூக காலாசர கட்டமைப்பு, போக்குவரத்து மற்றும் பொருளாதாரம் என்பன அழிவுக்குள்ளாகும் என்று நாம் கருதுகின்றோம். அது மாத்திரமின்றி அந்த பிரதேசத்தின் காலநிலையும், சூழலும் மீளமைக்க முடியாத அழிவுக்கு உள்ளாகும்.

மேலும் இந்த பொசுபேற் படிமம் இலங்கை மக்களுக்குச் சொந்தமான ஒன்றென்றும் ஆட்சியிலிருக்கும் அரசாங்கம் அம்மக்களின் பொறுப்பாளிகள் என்றும் அந்த பொறுப்பின் கீழேயே இந்த படிமமும் உள்ளடங்குவதாக நாம் கருதுகின்றோம்.

அத்தோடு இத்தகையதொரு ஒப்பந்தம் எமது உரிமைகள், சொத்து, சூழல், கலாசாரம் மற்றும் சமூக உறவு என்பவற்றில் எவ்வாறு தாக்கம் செலுத்தும் என்பதை அறிந்துகொள்ளும் உரிமை எமக்கிருப்பதாக நாம் நம்புகின்றோம்.

அதனால் அவ்வாறானதொரு ஒப்பந்தம் காணப்படுமாயின் அதனுடன் தொடர்புடைய விபரங்களை வெளியிடுமாறும், மக்களின் கருத்துக்களை பெற்றுக்கொள்ளுமாறும் இத்தால் கேட்டுக்கொள்கிறோம்.




## இந்த தகவல் கோரலுக்கு எனக்கு பதில் கிடைக்கவில்லை

Globe Printing Works -329739